## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் வ.உ.சிதம்பரனாருக்கு பல்வேறு சிறப்புகள் செய்தோம்!

# கழக அரசு அறிவித்த - ‘திருநெல்வேலி எழுச்சி’க்கான நினைவுச் சின்னத்தை தற்போதைய அரசும் கைவிடாமல் நிறைவேற்ற வேண்டும்!

## வ.உ.சி. பிறந்தநாளில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, செப். 7-**

**செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாளில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில்,**

**“கழக அரசு அறிவித்த ‘‘திருநெல்வேலி எழுச்சி”க்கான நினைவுச் சின்னத்தை தற்போதைய அரசும் கைவிடாமல் நிறைவேற்ற வேண்டும்!” என்று வலியுறுத்தியுள்ளார்.**

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

“தியாகத் திருவுளம் வ.உ. சிதம்பரனார் பிறந்தநாள்

நாட்டின் விடுதலைக்காகச் செக்கிழுத்தார், செந்நீர் சிந்தினார், ஆங்கிலேயரை எதிர்த்துக் கப்பல் விட்டார். இது மட்டுமா வ.உ.சி.?




திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார், தொல்காப்பிய உரையைப் பதிப்பித்துள்ளார், ஆங்கில நூல்களை மொழிபெயர்த்துள்ளார், அந்நாளிலேயே தொழிலாளர் உரிமைக்காகப் போராடியுள்ளார்.

இத்தகைய பன்முக ஆளுமையான வ.உ. சிதம்பரனாரின் வாழ்வும் பணிகளும் எல்லோரையும் சென்றடையும் வகையில் கடந்த 5 ஆண்டுகால ‘திராவிட மாடல்’ ஆட்சியில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு செக்கிழுத்த செம்மலுக்குச் சிறப்பு சேர்த்தோம்.

அவற்றுடன், 1908 திருநெல்வேலி எழுச்சிக்கான நினைவுச் சின்னத்தையும் அறிவித்தோம். தற்போதைய அரசும் அதனைக் கைவிடாமல், நிறைவேற்றிட வேண்டும் எனத் தமிழர் தம் சிந்தையில் இருந்து என்றும் அகலாத சிதம்பரனாரின் பிறந்த நாளில் கேட்டுக் கொள்கிறேன்!”

இவ்வாறு அவ்வலைதளப் பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## மனித நேயத்தால் ஒன்றுபட்ட சமூகத்தைக் கட்டமைக்க

# ஆசிரியர் தினத்தில் உறுதி கொள்வோம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, செப்.7-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆசிரியர் தினத்தையொட்டி வெளியிட்ட சமூகவலை தளப்பதிவில், “அறிவால் உயர்ந்து, பகுத்தறிவால் தெளிந்து, மனிதநேயத்தால் ஒன்றுபட்ட சமூகத்தைக் கட்டமைக்க ஆசிரியர் தினத்தில் உறுதிகொள்வோம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

“ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் இருக்கும் எதிர்காலத்தை அடையாளம் கண்டு, மாணவர்களை நல்ல மனிதர்களாக வளர்த்தெடுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு வாழ்த்துகள்!

நொடிப்பொழுதில் விடைகளை வழங்கும் AI காலத்தில், எதையும் பகுத்தறிந்து, சரியான கேள்விகளைக் கேட்கும் தலைமுறையை உருவாக்குவதே இனி ஆசிரியர்களின் பெரும் பணி!

அறிவால் உயர்ந்து, பகுத்தறிவால் தெளிந்து, மனிதநேயத்தால் ஒன்றுபட்ட சமூகத்தைக் கட்டமைக்க ‘ஆசிரியர் தினத்தில்’ உறுதிகொள்வோம்!”

இவ்வாறு அப்பதிவில் - கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## முரசொலி கணினி பிரிவில் பணிபுரியும்

# க.விக்னேஷ் சகோதரி க.சுபலட்சுமி - ரா.சதீஷ் திருமண விழா!


## செங்கல்பட்டு – மாமண்டூரில் நடைபெறுகிறது! ஊழியர்கள் – நண்பர்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை, செப்.7

கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்-கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்துக்களுடன்

சென்னை சைதாப்பேட்டை, 170 அ வட்டம் களிகுன்றத்தில் வசிக்கும் பா. கபாலி – க. மாரியம்மாள் ஆகியோர் மகளும்,

முரசொலி செய்தித்தாளில் கணினி பிரிவில் பணிபுரியும் க.விக்னேஷ் சகோதரி க. சுபலட்சுமி – செங்கல்பட்டு



மாவட்டம், மதுராந்தகம் வட்டம் படாளம் கிராமத்தில் வசிக்கும் எம்.ராஜேந்திரன் – ஆர். கன்னியம்மாள் ஆகியோரின் இளைய மகனுமான ஆர். சதீஷ் ஆகியோர் திருமண விழா இன்று (7.9.2026), திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு படாளத்தில் அமைந்துள்ள C.S.I அடைக்கலநாதர் ஆலயத்தில் படாளம் புலிப்புரகோவில் குருசேர ஆயர். அருட்பணி எம். தீபக்ராஜ் அவர்கள், வண்டலூர் குருசேர ஆயர். அருட்பணி பி.சாமுவேல் அன்பரசு அவர்கள், படாளம் சபை ஊழியர் டி.பிரபுராஜ் அவர்கள், மிஷ்னரி லாசர் அவர்கள், மற்றும் களிக்குன்றம் ஆயர். அருட்பணி எம்.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடத்தப்படும், தூய திருமணத்திற் கும் அதன்பின் மாலை 6.30 மணிக்குமேல் (GST. சாலை ஆற்றங்கரை) மாமண்டூரில் அமைந்துள்ள C.S.K A/C மஹாலில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் ஆர். ராஜேஷ் – திருமதி எஸ்.சரளா, ஆர்.நந்தினி, ஆர்.இனியா ஆர்.மித்ரன் மற்றும் களிக்குன்றம் – படாளம் நண்பர்கள், உறவினர்கள், முரசொலி ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்றனர்.



செக்கிழுத்த செம்மல், சுதந்திர போராட்ட தியாகி வ.உ.சி. அவர்களின் 155 வது பிறந்த நாள் விழா கரூர் மாவட்டக் கழகம் சார்பில், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம் .எல்.ஏ., வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. கரூர் கலைஞர் அறிவாலயம் முன்பு வைக்கப்பட்ட வ.உ.சி. அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.